தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST



## எலிசா
## Elisha

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16


ஆசிரியர்
B. அர்ஜுனன்



மரம் 14 செப்டம்பர் 2014 கனி 10



R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Sep. 2014

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

"யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்"
சங்கீதம் 46:11


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA


*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



கம்பம் பகுதியில் கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்து
ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட எட்டுபேரில் ஒருவர்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor:**
**B.ARJUNAN**
**Associate Editors:**
**S.Reagan**
**A.Kanagaraj**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட் அவர்களின் வேதபாடம்
உதவி எழுத்தாளரின் செய்தி
மற்றும்
வாலிபர் பகுதி
பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி
வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 169

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும்.

1. நான் சரீரத்தில் தரித்திருப்பது உங்களுக்கு அதிக அவசியம் என்ற அப்போஸ்தலன் யார்?
2. இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள் என்று தாவீதை நோக்கி சொல்லியவர்கள் எவர்கள்?
3. கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே எது என பவுல் குறிப்பிடுகிறார்?
4. கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டு விசை தரிசனமாகி, எவைகளைப் பின்பற்றவேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தார்?
5. பிலிப்பிபட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடிடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி யாருக்குள் தைரியங்கொண்டிருந்ததாக பவுல் எழுதுகிறார்?
6. உமது அடியேன் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை என்ற படைத்தலைவன் யார்?
7. பவுலுடைய நாட்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்றுத்திரிகிறார்களென்று கேள்விப்பட்டாரா?
8. கர்த்தருக்குக் கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கும்படி மகா பெரியதாயிருக்கவேண்டும் என்று விரும்பி தன் மரணத்திற்கு முன்னே திரளாய் சவதரித்துவைத்த தாசன் யார்?
9. சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப்பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு என பவுல் யாருக்கு எழுதுகிறார்?
10. சாமுவேல் நாள் தொடங்கி அப்படிக்கொத்த பஸ்கா எந்த ராஜாவின் நாட்களில் நடந்தது?

## எலிசா
## Elisha

- எலிசா என்றால் என் 'தேவன் இரட்சிப்புமானவர்' (God is salvation) என்று அர்த்தம்
- எலிசா எலியாவினிடத்தில் இரட்டிப்பான ஆசீர்வாதத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டவன் (2இரா.2:9,10)
- பன்னிரண்டு ஏர் பூட்டி உழுத சாப்பாத்தின் குமாரன் எலிசா (1இரா.19:19)
- எலிசா சுனேமியாளின் மகனை திரும்ப உயிர்பெறச் செய்தான் (2இரா.4:35)
- எலிசாவின் கல்லறையில் விழுந்த ஒரு மனுஷனின் பிரேதம் உயிரடைந்து தன் காலூன்றி எழுந்திருந்தான் (2இரா.13:21)



சிறுவர் பகுதி

## சரட்டையாகிலும்...

## Even a thread...

வேத பகுதி: ஆதியாகமம் 14:21–24



ஆபிரகாமைப் பற்றி நாம் அநேகமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் நமது விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் இந்த ஆபிரகாமை அபரிவிதமாக ஆசீர்வதித்திருந்தார். எப்படியென்றால் “நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்”. இந்த ஆசீர்வாதத்துக்கு ஆபிரகாம் பாத்திரவனாயிருந்தார். சரி, என்ன சரடு என்று கேட்கிறீர்களா? ஆபிரகாம் பிறனுக்குள்ள ஒரு சாதாரண சரட்டைக் கூட இச்சிக்கவில்லை.

சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப்பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார்.

பொருள்கள் என்றால் நமக்கு கொள்ளை ஆசை. இதைத்தா அதைத்தா என்று இருக்கிற எல்லாவற்றையும் கேட்டுவாங்கிவிடுவோம். ஆனால் ஆபிரகாமோ அப்படியில்லை. கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார். ஏன் நாமும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காது நம்முடைய தேவனுக்கு நேராக ஜெபித்து பெற்றுக்கொள்ளக்கூடாது? முடியும் அல்லவா? அப்படியானால் நாமும் விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமைப்போல பிறனுக்குள்ள ஒரு சின்ன பென்சிலைக்கூட எடுத்துக்கொள்ளாமல் தேவனிடத்தில் கேட்போம். அவர் ஆபிரகாமை ஆசீர்வதித்தது போல நம்மையும் ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

**மனப்பாட வசனம்**

“வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்” (ஆதியாகமம்14:23)

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக - யாத்திராகமம் 20:17



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 14 செப்டம்பர்-2014 கனி - 10

ஆசிரியருரை

## கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்

## One Thing I Ask of the Lord



**ம**னிதர்களை நோக்கி அநேகர் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். அந்த மனிதனுக்கு யார் கொடுத்தது? என்று நினைப்பதில்லை. அவனுக்குக் கொடுத்த கர்த்தர் நமக்கும் கொடுக்கமாட்டாரா? தேவன் பட்சபாதம் உள்ள தேவன் அல்ல. அவர் எல்லோருக்கும் தேவன். தம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். தாவீது அரசனை நீங்கள் அறிவீர்கள். அவன் சொல்லிய வாக்கியத்தை கேளுங்கள். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும் படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" என்றான் (சங்.27:4). ஒவ்வொருவருடைய விருப்பமும் பலவிதமாக இருக்கிறது. ஆனால் தாவீதின் விருப்பம் அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியான விருப்பமாயிருந்தது. அநேக சபைகளில் வேதாகம பாடசாலை வைத்து நடத்துகிறார்கள். சிலருக்கு அந்த விதமான வேதாகம பாடசாலையில் கலந்து கொள்ளவிருப்பமில்லை. காரணம் பலவிதமான வேலைகள் இருக்கிறது என்பார்கள். தாவீது வேலையில்லாமல் இருந்தாரா? அவரோ ஒரு அரசன். அவருக்கு ராஜ்யத்தின்வேலைகள் எவ்வளவாய் இருந்திருக்கும்! அத்தனை வேலைகள் இருந்தபோதிலும் அவர் தேவனை தேடவும், அவருடைய நியாயப்பிரமாணபுத்தகங்களை ஆராய்ந்து பார்க்கவும் முக்கியத்துவம் கொடுத்தார். நம்முடைய வாழ்க்கையில் எதற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். உலக காரியங்களுக்கா? அல்லது தேவனுடைய காரியங்களுக்கா? உலகம் உலகத்தை சிநேகிக்கிறது. நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருப்பீர்களானால். தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கர்த்தருக்குரிய காரியங்களைக் குறித்து சிந்தித்து செயல்படுங்கள்.

மேலும், தாவீது நான் என் ஜீவனுள்ளநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் என்கிறார். அவருடைய நோக்கமெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றியதாயிருந்தது. இன்றைக்கு சபைக்கு செல்லவே சிலருக்கு கடினமாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆராதனைக்கு சென்று கர்த்தரை தொழுதுகொள்வதில் அவர்களுக்கு அப்படி என்ன பிரச்சனை இருக்கிறது என்பது

தெரியவில்லை. அதை கேட்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. நாம் உயிரோடிருப்பதே தேவனுடைய சுத்த கிருபை. அந்த ஜீவனை ஒவ்வொருநாளும் கூட்டி வழங்கிக்கொண்டிருக்கும் அவரை நாம் ஆராதிப்பது எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது! கர்த்தரையும் அவருடைய செயல்பாடுகளையும் குறித்து ருசிபாராத சிலரை நாம் நினைக்கும்போது அவர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ராஜ அரண்மனை வாழ்வை அதிகமாக விரும்பாத தாவீது, கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடினார். அவர் அந்த அளவுக்கு கர்த்தரையும் அவருடைய வேலைகளையும் நேசித்திருக்கிறார். அவருக்கு கர்த்தருடைய ஆலயத்திலே நிம்மதி கிடைத் திருக்கும். அநேக பக்தியுள்ள தேவமக்கள் தேவசமுகத்தில் இருப்பதையே விரும்புகின்றனர். ஆம் பிரியமானவர்களே, அது மிகவும் உண்மையான வார்த்தை. அங்கே சந்தோஷம் உண்டு, சமாதானமுண்டு, தேவஆசீர்வாதமுண்டு. இதை ருசித்தவர்கள் தேவசமுகத்தை நித்தமும் நாடுவார்கள், தேடுவார்கள். இச்செய்தியைக் வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் எதை நாடி, தேடிக்கொண்டிருக்கிறீர்கள். தாவீதைப்போல ஆராய்ந்து, அவருடைய சமுகத்தை நித்தமும் தேடவும் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். தாவீதை ஆசீர்வதித்த கர்த்தர் உங்களையும் ஆசீர்வதிப்பார்.

தாவீதைப்போல தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்ட மரியாளைக்குறித்து லூக்.10:42-ம் வசனத்தில் படிக்கிறோம். "தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்று ஆண்டவர் இயேசு மார்த்தாளைப் பார்த்துச் சொன்னார். உலகத்திலே எத்தனையோ காரியங்கள் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மனுஷிக்கும் பல விதமான ஆசைகள் இருக்கிறது. ஆனால் தன் வீட்டிற்கு வந்த ஆண்டவர் இயேசுவின் பாதத்தை விட்டு எழுந்திருக்க மரியாளுக்கு மனதில்லை. ஆண்டவருடைய வார்த்தைகளை கேட்கும்படியாக உட்கார்ந்துகொண்டு வசனத்தைக் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் மார்த்தாளோ பற்பலவேலைகளைச் செய்வதில் கவனமுள்ளவளாயிருந்தாள். தன்னுடைய வீட்டிற்கு வந்திருப்பது யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவருடைய வல்லமை எப்படிப்பட்டது? என்பதை நன்கு அறிந்தவளாயிருந்திருந்தாள் இப்படி உலக வேலைகளில் கவனமாயிருந்திருக்கமாட்டாள். அவள், மரியாள் இயேசுவை அறிந்த அளவு அறியவில்லை என்றே சொல்லவேண்டும். ஆகையால் வேலையில் கவனமாயிருந்தாள். மரியாளோ ஆண்டவரை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள். அன்பான சகோதரிகளே, நீங்கள் எவைகளைத் தெரிந்துகொண்டவர்களாக இருக்கிறீர்கள்? மார்த்தாளைப்போலவா? அல்லது மரியாளைப்போலவா? உலகத்தில் இருக்கும்வரை உங்களுக்கு வேலைகள் இருக்கத்தான் செய்யும். ஏனென்றால் ஆதாமுக்கு துணையாக ஏவாளை உண்டாக்கினார். சகோதரிகளாகிய நீங்கள் ஏற்ற துணையாக தேவனால் உண்டாக்கப்பட்டபடியால் உங்களுக்கு வேலை அதிகமாகவே இருக்கும். அதில் சந்தேகமில்லை. அந்த வேலைகளை சற்று ஒதுக்கிவைத்துவிட்டு நல்ல பங்கை தெரிந்துகொண்ட மரியாளைப்போல ஆண்டவருடைய வசனங்களுக்கு செவிகொடுக்கவேண்டும். மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொருவார்த்தையினாலும் பிழைப்பான் என வேதம் போதிக்கிறது. ஆகையால் தேவனுடைய வசனங்களுக்கு முதலிடம் கொடுங்கள். குடும்பத்தில் உள்ள அனைவரும் சபைக்கு செல்வது உங்களுடைய கரத்தில் இருக்கிறது. வீட்டுவேலைகளை பொதுவாக எல்லாகுடும்பங்களிலும் பெண்களே அதிகமாக கவனிக்கிறார்கள். அந்த வேலைகளை நீங்கள் சீக்கிரத்தில் எழுந்து முடித்தால்தான் எல்லோரும் சபைக்கு குடும்பத்துடன் செல்லமுடியும். பாதிவேலையை முடித்துவிட்டு சபை கூட்டங்களுக்கு சென்றால் பாதி எண்ணம் வீட்டிலும், பாதி எண்ணம்



பொய்யான தேவர்கள் பொய்யான நம்பிக்கை மற்றும் பாதுகாப்பைக் கெடுக்கின்றன.

2. முன்னமே பரபரப்பாயிருக்கிற வாழ்க்கையில் தினிக்கப்பட்ட ஒன்று கிறிஸ்தவம் அல்லது மற்ற நம்பிக்கைக்குரிய நம்பிக்கையின் மீது திணிக்கப்பட்ட சில கோட்பாடுகளல்ல. மாற்றுக் கடவுள்களை விட்டு நாம் முற்றிலும் திரும்பாதவரை நாம் உண்மையான தேவனைப் பின்பற்றுகிறவர்களாகயில்லை.

**ஆ. கர்த்தருக்கு ஊழியம் செய்யவே மாற்றப்பட்டோம் (1:9).**

1. ஒரு அடிமையைப்போல வேலைசெய். நம்முடைய பணி முழுமையானது. கர்த்தருக்கு எஜமானாயிராத அல்லது அவருக்கு அடிமையாயிராத ஒரு நேரமோ ஒரு சூழ்நிலையோ இல்லை. இது முற்றிலும் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை.

2. ஜீவனற்ற விக்கிரகங்களோடு ஜீவனுள்ள தேவனை ஒப்பிட்டுப்பாருங்கள்.

3. உண்மையான கர்த்தரை போலியானவைகளோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

**இ. இயேசுவுக்கே காத்திருக்கும்படி மாற்றப்படுதல் (1:10)**

1. எதிர்பார்ப்போடும் பொறுமையோடும் காத்திருத்தல் பற்றிய குணாதிசயமல்ல. மனிதனுக்குரிய அபரிவிதமான பொறுமை.

அ. இன்றைக்கு பெருமளவிற்கு கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய எதிர்பார்ப்பை இழந்துவிட்டார்கள். தெசலோனிக்கேயர்களை அவசரப்படுத்த தேவையில்லை.

ஆ. அவர்கள் அது (வருகை) உடனடியாக நிகழும் என்றும் நினைக்கக்கூடிய நிலைக்குச் சென்றுவிட்டார்கள்.

இ. நாம் எதிர்காலத்தில் இது மிக அதிக காலமாகும் என்று எண்ணுகிறோம்.

ஈ. இயேசுவுக்காக நாம் எப்படிக் காத்திருக்கிறோம்?

ஏதும் செய்யாமலிருப்பதில்லை. வேலைகளை செய்து கொண்டிருக்கவேண்டும்.

**2. சேவையும் நம்பிக்கையும் ஒன்றோடொன்று சேர்ந்தே செல்லும் (1:3).**


**ஈ விசுவாசத்தின் கிரியை, விசுவாசம் செயலை உண்டாக்கும். கிரியைகளில் சொல்லப்படாத விசுவாசம் விசுவாசமே இல்லை. ஆவில்லாத சரீரம் செத்தாயிருக்கிறதுபோல கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது (யாக்.2:26).**

**உ.கவலையற்றவர்கள் வெதுவெதுப்பானவர்கள், ஈடுபாடில்லாத கிறிஸ்தவர்கள் இவர்களெல்லாம் ஊழியர்களல்ல.**

1. அன்பின் ஊழியம் (மிக அதிகமான வேலை) கிறிஸ்தவ மனப்பான்மை நாம் நேசிப்பதால் சேவை செய்கிறோம். அன்பில்லாவிட்டால் தேவனுக்குச் செய்யும் வேலை அர்த்தமற்றதாகிவிடும் (1கொரி.13;13) (உதாரணம் காற்றிலே வரும் இசைபோல).

2. அதிக வேலையுள்ள வேலை (பிள்ளைகளை தாய் பராமரிப்பது, சிஸ்டைன் ஆலயத்தை ஓவியம் தீட்ட மைக்கேல் ஏஞ்சலோவுக்கு மூன்று ஆண்டுகளாயிற்று. ஒவ்வொரு ஓவியமும் மிகவும் சிரமப்பட்டு, கவனமாய் செய்யவேண்டியதாயிற்று. முதுகில் சாய்ந்து கொண்டே பெரும் பகுதியான ஓவியங்களை அந்த மூன்று வருடங்களிலும் வரைய வேண்டியதாயிற்று. ஒவ்வொரு நாள் வேலை முடிவிலும் அவருடைய முதுகு எவ்வளவு வலித்திருக்கும் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? எப்படியோ அவருக்கு ஓவியம் தீட்டுவதில் மிகுந்த அன்பிருந்தது. அவருடைய வேலை அன்பின் உழைப்பு. இன்று அவருடைய அன்பின் சேவையை நினைவு கூறுகிறோம்.

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும்,
என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது – சங்கீதம் 119:105**




# பாடம் –8 மாதிரி சபை *- Jerry Bates*

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

4. நாம் தேவனை எப்படிப் பின்பற்ற வேண்டுமென்று அவருடைய வார்த்தையிலிருந்து கற்றுக் கொள்ளுகிறோம். கனவுகள், தரிசனங்கள் மற்றும் மனித தத்துவங்களிலல்ல.

**இ. கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் துன்பப்பட மனதாயிருப்பார்கள் (1:6)**

1. அவர் அப்படிப்பட்ட ஒரு மாதிரியாக இருப்பதற்கு அவர்களுடைய பாடுகள் ஒரு காரணம். ஆதியில் யூதர்கள் தங்கள் நாட்டிலேயே துன்பப்பட்டதுபோல இவர்களும் தங்கள் சொந்த நாட்டு மக்களிடம் துன்பப்பட்டனர் (2:14).

2. பவுல் அங்கே மூன்று வாரங்களே இருந்தார். ஆனால் அவர் நகரத்திலிருந்து கடத்தப்பட்டார் புதிய கிறிஸ்தவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். சிலர் அதிசயிக்கலாம் எப்படி மூன்று வார கால வேளைக்குள் இவ்வளவு பெரிய பலன் கிடைத்திருக்குமென்று (அப்17).

3. இருப்பினும் துயரத்துக்கு பதிலாக, தெசலோனிக்கேயர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். இரட்சிப்பின் சந்தோஷத்தை துன்பங்களால் கூட எடுத்துப்போட முடியாது.

**ஈ. கர்த்தரைப் பின்பற்றியவர்கள் மாதிரிகளாயிருக்கின்றனர்.**

1. மாசிடோனியா அவர்களுடைய சொந்த மாகாணம் அகாயா தெற்கேயுள்ள அடுத்த மாகாணம். கொரிந்து தலைநகரம்.

2. உதாரணமாக கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் அதிகாரமிருக்கிறது நன்மைக்கும் தீமைக்கும் ஏதுவானது.

3. கெட்டுப்போன ஒரு ஆப்பிள் கூடை முழுவதையும் அழுகச் செய்யும்.

4. கிறிஸ்தவர்கள் அடிக்கடி மாதிரிகளாக (நல்ல) இருக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறார்கள் (மத்.5:13-16).

**உ. கத்தரைப் பின்பற்றுகிறவர்கள் சுவிசேஷப் பணி செய்பவர்களாக இருப்பார்கள் (1:8). அவர்கள் பெற்றுக்கொள்ளுகிறவர்களாகவும், அனுப்புகிறவர்களாகவும் இருப்பார்கள்.**

1. சத்தமாய்ச் சொல் என்ற வார்த்தை நாட்டில் தொனிக்கப்படும். எக்காளம் அல்லது இடி போன்றவற்றின் சத்தத்தை விவரிப்பதாக அதிலிருந்து வந்ததாக இருக்கலாம்.

2. தங்கள் சொந்த நகரத்தினின்றும் வெகுதூரத்திற்கு அவர்களுடைய செல்வாக்கு சென்றடைந்தது.

அ. வார்த்தை காண்பிக்கப்படவேண்டும்.

ஆ. வார்த்தை பேசப்படவேண்டும்.

3. மற்றவர்கள் பவுலிடம் அவர்கள் விசுவாசத்தைப் பற்றி சொல்லுமளவுக்கு அது நன்கு தெரிந்திருந்தது.

**III.கிறிஸ்தவர்கள் (மன) மாற்றப்பட்ட மக்கள் (1:9) திரும்பினார்கள் என்றால் வெளிப்படையான விருப்பத்தோர்வின்படி நிகழ்ந்த மாற்றம்.**

**அ. கிறிஸ்தவன் என்றால், வாழ்க்கை முற்றிலும் மாற்றப்பட்டவன் என்று பொருள். ஜீவனுள்ள உண்மையான தேவனிடம் முழு நம்பிக்கையுள்ளவன் என்று பொருள்.**

1. இனி ஒருபோதும் விக்கிரகங்களையோ மற்ற கடவுள்களையோ சேவிப்பதில்லை.



சபையிலும் இருக்கும். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டை கட்டுகிறாள் என்ற வசனத்திற்கேற்ப நீங்கள் ஞானமாய் காரியங்களைச் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். மார்த்தாளைப்போல வீட்டுவேலைகளைக் குறித்து கலங்கி கவலைப்படாதிருங்கள். நல்ல பங்கை தெரிந்துகொள்ளுங்கள்.

நூற்றுக்கு அதிபதியைக் குறித்துப் படிக்கிறோம். அவன் கர்த்தரிடத்தில் ஒன்றைக் கேட்டான் அது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நாமெல்லாம் நல்லசுகம் வேண்டும். என் குடும்பம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்று பல காரியங்களைச் சொல்லி நமக்காக வேண்டிக்கொள்ளுவோம். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியோ; இயேசுவை நோக்கி: "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று தன் சிநேகிதரிடத்தில் சொல்லி அனுப்பினான் (லூக்.7:7). யாராவது வேலைக்காரனுக்காக வேண்டிக்கொண்டதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வேலைக்காரன் சுகவீனமாயிருந்தால் லீவு கொடுத்து அனுப்பிவிடுவார்கள். சிலர் எந்த விதத்திலும் வேலைக்காரனைக் கண்டுகொள்ளமாட்டார்கள். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியாகிய எஜமான் அவன் மீது அன்பு செலுத்தியபடியால், அந்த வேலைக்காரனை ஒரு வேலைக்காரன் போல பார்க்காமல் தன் வீட்டில் ஒருவருக்கு சுகமில்லாமல்போனால் எந்த அளவு அவர்களுடைய சுகத்திற்காக முயற்சி எடுப்போமோ அந்த அளவு அவனுக்காக இயேசுவை நோக்கி வேண்டிக்கொண்டான். ஆண்டவர் இயேசு இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் கண்டு இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ என்றாவது உன் வேலைக்காரனுக்காக கர்த்தரை நோக்கி ஜெபித்ததுண்டா? அவர்களும் நம்முடைய வீட்டில் ஒரு வேலையைச் செய்யக்கூடிய ஒரு நபராக இருக்கிறார்கள். அவர்கள் நலமாக இருந்தால்தான் நாம் நலமாக இருக்கமுடியும். நாம் எத்தனையோ காரியங்களுக்காக கர்த்தரிடத்தில் மன்றாடுகிறோம். இந்த நூற்றுக்கு அதிபதியைப்போல நம் வேலைக்காரர்களுக்காகவும் ஜெபிப்போம்.

பர்திமேயு என்ற பார்வையற்ற ஒருவனை இயேசு கண்டு நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றார். பொதுவாக இப்படிக்கேட்டுவிட்டால் என்ன நினைப்பார்கள். நாம் கேட்டதையெல்லாம் செய்துவிடுவார் என்று கார், பங்களா என்று அடுக்கிக்கொண்டே போவார்கள். ஆனால் இந்த கண்பார்வையற்ற குருடன். அப்படிக்கேட்கவில்லை; "ஆண்டவரே நான் பார்வையடையவேண்டும் என்றான்" (மாற்.10:51). அநேக பார்வையற்ற சகோதரர்களை நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் என்னிடம் நல்ல மனைவிவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அல்லது நீங்கள் கொடுக்கும் உதவி எனக்குப்போதவில்லை கொஞ்சம் அதிகமாக கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நான் பார்வையடையவேண்டும் எனக்காக ஜெபியுங்கள் என்று ஒருவர் கூட கேட்டதில்லை. எல்லாம் உலககாரியங்களையே கேட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த பர்திமேயு தன் தேவை ஒன்ரே ஒன்று அதையே கர்த்தரிடம் கேட்டான். நான் பார்வையடையவேண்டும் ஆண்டவரே என்றான். அவனுடைய கோரிக்கையை கர்த்தர் உடனே அந்த நிமிடமே நிறைவேற்றினார். எத்தனை ஆச்சரியமான காரியம் பார்த்தீர்களா? அன்பான வாசகரே நீங்கள் எதைக் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். தேவையான காரியத்தை கர்த்தரிடத்தில் கேட்டுப்பெற்றுக்கொள்ளுங்கள்.

லூக்.23:42-ம் வசனத்தில் இயேசுவோடு சிலுவைகளில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன்; "இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்". தன் மரணத்தை நோக்கிக்கொண்டிருந்த இந்தக் கள்ளனின் விருப்பம் அதுவாயிருந்தது. ஒருவேளை நீங்கள்

அந்த இடத்தில் இருந்தால் என்ன கேட்டிருப்பீர்கள். மனைவி பிள்ளைகளை காப்பாற்றும்படியாகவோ அல்லது என்னை சிலுவையில் அறைந்த அந்த ராஜ்யத்தின் மக்களை ஏதாவது செய்யுங்கள் என்றோ அல்லது மற்ற கள்வனைப்போல நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்ளும் என்றோ கேட்டிருப்போம் அல்லவா? அவனோ கர்த்தரிடத்தில் ஒன்றை கேட்டான் அதுவும் நிலையான வாழ்வு, நித்தியஜீவனுக்குரிய வாழ்வு, பணம் பொருளை கேட்டிருந்தால் அது உலகத்தோடு போய்விடும். அவன் மனந்திரும்பியவனாக, தன்னுடைய குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை அனுபவிக்கிறோம் என்று சொன்னவனாக, ஆண்டவரிடத்தில் ராஜ்யத்தில் இடம் கேட்டான். அவருடைய ராஜ்யத்தைப் பற்றி அவன் அறிந்திருக்கக்கூடும். ஆகையால் சிறப்பானதைக் கேட்டான். அவனுடைய விருப்பத்தின்படி இயேசு இன்று என்னுடனே பரதீசில் இருப்பாய் என்றார். எத்தனை பாக்கியம் பார்த்தீர்களா? இயேசுவோடு உண்டு உறங்கின செபதேயுவின் குமாரர்கள் யாக்கோபு யோவான், மகிமையிலே வலது இடது புறத்தில் உட்கார இடம் கேட்டார்கள். அதற்கு ஆண்டவர் அது என் காரியமல்ல என்றார். சிலுவையில் தொங்கிய கள்ளனுக்கு இயேசுவோடு பரதீசுக்கு போகும் பாக்கியம் கிடைத்தது. யாருக்குமே கிடைக்காத ஒரு பாக்கியம் என்றே சொல்லவேண்டும்.

ஒரு ஆயக்காரனின் ஜெபம் என்னவாயிருந்தது; "தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான் (லூக்.18:13). இன்றைக்கு நம்முடைய வேண்டுதல் எப்படியிருக்கிறது. முதலாவது நான் ஒரு பாவி என்று நாம் ஒத்துக்கொள்கின்றோமா? அநேகர் மரணம் வரை தங்களுடைய தவறை ஒத்துக்கொள்வதில்லை. தாவீது தன் பாவத்தை கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டான். ஆகையால் தேவனிடத்தில் அவன் இரக்கம் பெற்றான். இந்த ஆயக்காரன் அப்படியாக ஜெபித்தான். ஆனால் பரிசேயனோ ஆயக்காரனை குறைகூறி ஜெபித்தான். இவனுடைய ஜெபத்தை தேவன் நிராகரித்தார். ஆயக்காரனுடைய ஜெபமோ கேட்கப்பட்டது. உங்களுடைய ஜெபம் தேவசமுகத்தில் கேட்கப்பட முதலாவது இந்த ஆயக்காரனைப்போல உங்களைத் தாழ்த்துங்கள்.

**நம்முடைய ஜெபம் எப்பொழுது கேட்கப்படும்?**

எல்லோரும் ஜெபிக்கிறோம். ஆனால், சிலருடைய ஜெபம் கேட்கப்படுகிறது சிலருடைய ஜெபத்திற்கு எந்தவிதமான பதிலும் தேவனுடைய சமுகத்திலிருந்து வருகிறதில்லை. இதற்கு காரணம் என்ன? அநேகர் இக்கேள்வியை எழுப்புகின்றனர். பரிசுத்த வேதாகமம் இதற்கான பதிலை கொடுக்கிறது. "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்று அறிந்திருக்கிறோம்" என்கிறார் யோவான் அப்போஸ்தலன் (1யோவா.5:14,15). நம்முடைய நம்பிக்கை எப்படியோ அப்படியே நம்முடைய ஜெபத்திற்கு பதிலும் இருக்கும். அநேக தேவனுடைய மக்களைக்குறித்து இச்செய்திவேளையில் தியானித்தோம். அவர்கள் கர்த்தரிடத்தில் ஒன்றை கேட்டார்கள் அதையே நாடினார்கள் பெற்றுக் கொண்டார்கள். நீங்களும் கேளுங்கள், நாடுங்கள் அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

> *தேவனே, உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர்;*
> *இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப்*
> *பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்;*
> *தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக – சங்கீதம் 68:35*



**வேத அறிவுப்போட்டி: 168 -ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. A. ரெபேக்காள் | - மதுரை |
| 3. S. லதா சூரியமூர்த்தி | - தேனி |
| 4. Mrs. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 5. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 6. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 7. T. ராஜாத்தி | - கோம்பை |
| 8. Mrs. சாந்தாபழனி | - தர்மபுரி |
| 9. T. ஏஞ்சலின் நேசமலர் | - மதுரை |
| 10. Miss. சாந்தாதேவி | - தேனி |
| 11. Mrs. ருக்மணி ஜெயசீலன் | - தேனி |
| 12. Ira. எதிராசன் | - சங்ககிரி |
| 13. D. டேவிட் | - சென்னை |
| 14. S. சரோஜினி முத்து | - தாராபுரம் |
| 15. V. வீரராகவன் | - கரூர் |
| 16. P. இன்பராஜ் | - திருநெல்வேலி |
| 17. K. மோகன் | - குமாரபாளையம் |
| 18. Sis. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 19. G. பூங்கோதை | - ஈரோடு |
| 20. P. சரவணகுமார் | - புதுப்பாளையம் |

**வேத அறிவுப்போட்டி: 168 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. சொல்லக்கூடாதே | - ரோம.9:14 |
| 2. லேவியனை | - உபா.12:19 |
| 3. ஒருவனாலும் கூடாது | - 1கொ.3:11 |
| 4. மனாசே, ஆம் | - யோசு.17:1 |
| 5. பெற்றார்களே | - 2கொ.12:14 |
| 6. ஆம் | - நியா.6:34 |
| 7. கலாத்திய சபையாருக்கு | - கலா.5:7 |
| 8. நகோமி | - ரூத் 1:5 |
| 9. கிருபை உண்டாயிருப்பதாக - எபே.6:24 | |
| 10. மூலவியாதி | - 1சாமு.5:6 |

## வாசகர் கடிதம்,

*கர்த்தருக்கு பிரியமான சகோதரர் அர்ஜீனன் அவர்களே! உங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கோடான கோடி நன்றிகளையும் ஸ்தோத்திரங்களையும் சொல்லிக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். "தி வேர்ட் ஆப் கிரைஸ்டு" பத்திரிகைக்காகவும் வத்தலக்குண்டு பகுதியில் தேவனுடைய ஊழியத்தை நடத்திவருகின்ற உங்களுக்காகவும் கோபி புதுப்பாளையம் பகுதியில் இருக்கின்ற கிறிஸ்துவின் சபையார் அனைவரும் தேவனிடத்தில் ஜெபம் செய்கின்றோம். உங்களது பத்திரிக்கை ஊழியமும் தொலைக்காட்சி ஊழியமும், வானொலி ஊழியங்களும் மேன்மேலும் தொடர்ந்து வர கோபி புதுப்பாளையம் கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்.*

*இப்படிக்கு*

*P. சரவணக்குமார்*

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041




**ஜெபியுங்கள்**



▸▸ தேனிமாவட்டத்திலுள்ள கம்பம் பகுதியில் நடைபெற்று வரும் கர்த்தருடைய சபையில் கடந்த மாதம் 12 பேர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். இவர்களை சகோ.ஜீவதுரை அவர்கள் வழிநடத்த இவ்விதழின் ஆசிரியர் சகோ. அர்ஜுனன் அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். இவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்காக...

▸▸ கடந்த மாதம் 26,27 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற சுவிசேஷ கூட்டங்களில் மூன்றுபேர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர்...

▸▸ இம்மாதம் தேனி மாவட்டத்திலுள்ள குமுளியில் ஒருநாள் விசேஷ கூட்டம் நடைபெறவுள்ளது இதற்காக...

முடிந்ததும் லாபான் ராகேலுக்கு பதிலாக தன் மூத்த மகள் லேயாளை மனைவியாகக் கொடுத்து வஞ்சிக்கிறான். நம்முடைய தேவனோ வாக்குமாறாதவர். அப்படியிருக்க நாமும் மற்றவர்களுக்கு ஏதாவது காரியத்தில் செய்வேன் என வாக்களித்துவிட்டு செய்யாமலிருப்போமானால் இந்த லாபானைப் போலும் ''கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி'' (நீதி.25:14) என்ற வசனத்திலுள்ளபடியும் இருப்போம். இப்படியிருப்பவர்களை வசனம் வஞ்சகன் என அழைக்கிறது. எனவே நாம் மற்றவர்களை வஞ்சியாதிருப்போமாக!

**அன்பு சகோதரிகளே, வேதம் எச்சரிக்கிறபடி சாத்தான் நம்மை வஞ்சிக்க இடம் கொடாமலும், நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளாமலும், மற்றவர்களை வஞ்சியாமலுமிருந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி கிரியை நடப்பிப்போமாக!**

## தேவனுடைய ராஜ்யம் என்றால் என்ன?

- S.V.Paulraj




தீர்க்கதரிசியான தானியேல், நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்துக்கு விளக்கம் அளிக்கும்போது, அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் (தானி.2:44) என்று குறிப்பிட்டார்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு "உம்முடைய ராஜ்யம் வருவதாக" மத்.6:10 என்று ஜெபிக்கும்படி கூறியதோடு இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மாற்கு 9:1).

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவா விட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்று யோவா.3:5-ல் இயேசுவானவர் உறுதிபடக்கூறினார்.

இயேசுகிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாளில் ஒரு பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு வந்திருந்த ஏராளமான ஜனங்களில் அப்போஸ்தலர்களின் உபதேசத்தைக் கேட்ட மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்று முதன் முதலில் ராஜ்யமாகிய சபை ஆரம்பிக்கப்பட்டதையும், அதன் பின் ஐயாயிரம் பேரும், பிறகு திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் அநுதினமும் கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டு வந்ததையும் (அப்.2;47;4:4; 5:14) வசனங்களில் காண்கிறோம். ரோமர் 16:16-ல் அப்போஸ்தலனாகிய பவுல் "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள் என்று எழுதும் சபை தேவனுடைய ராஜ்யமாகிய சபையை குறிக்கிறது.

மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயபட்டணத்து கிறிஸ்துவின் சபைக்கு எழுதும்போது; "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம்" என்கிறார் (கொலோ.1:13).



# ஞானம் – Wisdom

A.Kanagaraj
Associate Editor



தேவனைப் பற்றியும் அவர் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் அறிகிற அறிவை அடைவதும் அவருக்குப் பயந்து நடப்பதும் ஞானம் அல்லது மெய்ஞானம். தேவன் யார்? அவர் நாமம் என்ன? அவர் எப்படிப்பட்டவர்? அவர் எங்கே இருக்கிறார்? அவருடைய சித்தமென்ன? ஆகிய கேள்விகளுக்கு விடை அறிந்து கீழ்ப்படிவது அவருடைய சித்தமாயிருக்கிறது. நித்தியமும் அழிவில்லாமையும், அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு கனமும், வல்லமையும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென் (1தீமோ.1:17, யூதா5) தேவன் ஒருவரே ஞானமுள்ளவர்.

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார் அவனை தேவசாயலாகவே சிருஷ்த்தார்... (ஆதி.1:27). ஞானமுள்ள மனிதனாக தேவன் அவனைப் படைத்தார். அவனோ பலவிதமான உபாய தந்திரங்களினால் தன்னைக் கெடுத்துக்கொண்டான். எனவே ஞானம் மனிதனுக்கு குறையத்தொடங்கியது. "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்.1;5). ஞானத்தை தேவன் முழுமையாக கொடுக்கிறவர். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லை. கேட்கிற யாவருக்கும் ஞானத்தை பாரபட்சமில்லாது இலவசமாக கொடுக்கிறார். "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் என்றார் நம் ஆண்டவர் (மத்.7:7).

உலகத்திலே மிகப் பெரிய ஞானி ஒருவர் இருந்தார். அவர் ஞானமுள்ளவர் என்பதை குறித்து கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களிடத்திலிருந்து நானா ஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்கு வந்தார்கள் (1ராஜா.4:34). அவன் யாரென்றால் சாலொமோன். ஒரு முறை கர்த்தர் அவனுக்கு கனவிலே தரிசனமாகி "நீ விரும்புகிறதை என்னிடத்திலே கேள் என்று தேவன் சொன்னார். உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும் ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான் (1ராஜா.3:7-9) சாலொமோன் ஆயுசு நாட்களைக் கேட்கவில்லை, ஞானமுள்ள இருதயத்தைத்தாரும் என்று கேட்டான். தேவன் அவனுக்கு சம்பூரணமான ஞானத்தைக் கொடுத்தார்.


சாலொமோனுக்கு உண்டாயிருந்த கீர்த்தியை சேபாவின் ராஜஸ்திரீ கேள்விப்பட்டு அவள் விடுகதைகளினால் அவனைச் சோதிக்கிறதற்காக மிகுந்த பரிவாரத்தோடும் எருசலேமுக்கு வந்தாள். அப்பொழுது சாலொமோன் அவள் கேட்டவைகளை எல்லாம் விடுவித்தான். நான் வந்து என் கண்களாலே காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை. இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்றாள். உம்முடைய ஜனங்களும், உம்முடைய ஊழியக்காரர்களும் பாக்கியவான்கள் என்று சொல்லி; அவள் ராஜாவுக்கு 120 தாலந்து பொன்னையும், மிகுந்த கந்தவர்க்கங்களையும் இரத்தினங்களையும் கொடுத்தாள்.

இன்றைக்கும் நம் குடும்பங்களைக் கட்டி எழுப்ப ஞானத்தைக்கேட்டால் தேவன் நிச்சயம் கொடுப்பார். கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள்.

# விசுவாசத்தில் ஸ்திரமாகக்கட்டப்படுதல்

## Grounded in the Faith

*J.C.Choate*



முதல் நுற்றாண்டில் ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு சுவிசேஷத்தை (அதாவது 1கொரி.15:1-4-ல் விவரிக்கப் பட்டுள்ளபடி கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்) கேள்விப்படுதல் அவசியாமாயிருந்தது. ஏனென்றால் (மாற்.16:15; ரோம.10:17) விசுவாசம் இருதயத்தில் உருவாக வேண்டிருந்தது (ரோம.10:10, எபி.11:6). இது ஒருவனை தன் பாவங்களுக்காக மனந்திரும்பவும் (அப்.2:38, அப்.17:30), கிறிஸ்து தேவனுடைய குமாரன் என அறிக்கையிடவும், பாவமன்னிப்பிற்கென்று, அல்லது இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெறும்படி (அப்.2:38; மாற்.16:16) வழிநடத்திச் சென்றது.

இரட்சிக்கப்படும்படிக்கு தேவன் ஜனங்களைக் கேட்டுக்கொள்கிற காரியங்கள் இவைகள் என உறுதிப்படுத்தும் வண்ணமாக 14 மனந்திரும்புதலின் நிகழ்ச்சிகள் அப்போஸ்தலர் புத்தகத்தில் காணப்படுகின்றன. இப்புத்தகம் முழுவதும் வாசித்து உங்களுக்கென்றுள்ள உண்மையை அறிந்துகொள்ளுங்கள். சபையின் ஆரம்பநாட்களில் இரட்சிக்கப்படும்படி ஒரே ஒரு வழி மட்டும் இருந்தது எனவும் மேலும் இன்றும் இரட்சிக்கப்படும்படிக்கு ஒரே ஒரு வழி மட்டும் இருக்கிறது எனவும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

நாம் தேவன் தம்முடைய வசனத்தில் என்ன சொல்லுகிறார் என படித்து புரிந்துகொள்ள வேண்டும். இரட்சிப்பு என்பது அறிவீனம் அல்லது தவறான அடிப்படையில் அல்லாமல் சத்தியத்தை அறிகிற அறிவு மற்றும் கீழ்ப்படிதலின் அடிப்படையில் ஏற்படுகிறது. ஒருவன் எதிர்பாராதவிதமாக கிறிஸ்தவனாக மாறி கர்த்தருடைய சபையின் அங்கத்தினனாகிறதில்லை. அவன் எப்படியோ மனிதபுத்திக்கு எட்டாத விதமாக, கண்டுபிடிக்கும்படிக்கு ஒரு நாளில், தேவனுடைய பிள்ளையாகவும் கர்த்தருடைய குடும்பத்தில் அங்கத்தினனாகவும், ஆகிவிடுகிறதில்லை. மாறாக, அவன் சத்தியத்தை கற்றறிந்தவனாகவும், தேவனுக்கு தன்னுடைய கீழ்ப்படிதலில் தான் உண்மையாக என்ன செய்தான் என்பதையும் அறிந்தவனாகவுமிருக்கிறான்.

இது எளிமையாக்கப்பட்டதாகவும் மிகவும் ஆரம்பநிலையாகவும் இருக்கலாம், ஆனால் கர்த்தர் கற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து திறமைகளின் அடிப்படையில் சகல ஜனங்களோடு இடைபடுகிறார். எந்த மனிதனும் தன்னுடைய மனதில் சரியாகபுரிந்துகொண்டு அதற்கு பதிலளிக்கக் கூடிய வகையில் அவர் சுவிசேஷத்தையும் இரட்சிப்பின் திட்டத்தினையும் மிக எளிதாக உருவாக்கினார். இதைப்போல தீர்க்கன், “அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; அந்த



பெண்கள் பகுதி

# சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்

## Deceived From the Satan

*- Glory Arjunan*



- சென்ற மாதஇதழ் தொடர்ச்சி

**நம்மை நாமே வஞ்சித்தல்:** சில வேளைகளில் நம்மைநாமே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். எப்போது தெரியுமா? நாம் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாத போது வஞ்சித்துக்கொள்ளுகிறோம். “--நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின் படி செய்கிறவர்களாயும் இருங்கள்” (யாக்.1:22). சிலர் வசனம் இப்படியா இருக்கிறது என மனோவாஞ்சையாயிராமல், எங்களுக்குக் கர்த்தர் அதை வெளிப்படுத்தினார் இதை வெளிப்படுத்தினார் என தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களுக்கே இடமளித்து வஞ்சிக்கப்படுகிறார்கள். நம்முடைய நினைவுகள் கர்த்தருடைய நினைவுகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது, திருவசனம் சபை கூடிவருதலை வலியுறுத்துகிறது (எபி 10:25). ஆனால் நம்மில் எத்தனைபேர் இவ்வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாரந்தோறும் சபைக்குச் சென்று தேவனை ஆராதிக்கிறோம்? போதாகுறைக்கு முகூர்த்தங்களெல்லாம் ஞாயிற்று கிழமையிலே நடக்கிறது. போகாவிட்டால் உறவினர்கள் கோபித்துக்கொள்வார்கள் என கர்த்தருடைய நாளை தங்கள் சொந்த நாளாக மாற்றிவிடுகின்றோமா? நாளானது சமீபித்து வருகிறதை பார்த்து சத்தியத்தை அறிந்து பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்து மோசம் போனால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். மேலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டியதை சபையில் செலுத்தாமலிருந்தாலும் நம்மை நாமே வஞ்சித்து அழிவை சம்பாதித்துக் கொள்வோம். சப்பீராள் என்ற ஸ்திரீ கர்த்தருடைய சமூகத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டிய கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து கணவனோடு சேர்ந்து கர்த்தருடைய ஆவியை சோதித்தபடியால் மரித்துப்போனாள். அன்பு சகோதரியே, நீ இன்று வாழும் வாழ்வு, உன்னுடைய சம்பத்துக்கள் எல்லாமே கர்த்தர் உனக்கு கொடுத்தவை என அறிவாயா? பரலோக ராஜ்யத்தின் பணிக்கென நீ கொடுக்காமல் பொருளாசைக்கு இடமளித்து உன்னை நீயே வஞ்சித்துக் கொள்ளாதே “சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெறுக விதைக்கிறவன் பெறுக அறுப்பான்” (2கொரி.9:6).

**மற்றவர்களை வஞ்சித்தல்:** கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற அநேகர் மற்றவர்களை வஞ்சித்து தேவநாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகின்றனர். வேதாகமத்தில் லாபான் என்றவன் யாக்கோபை வஞ்சித்தான் என வாசிக்கிறோம் (ஆதி.29:25). யாக்கோபு லாபானின் மகள் ராகேலை திருமணம் செய்யும்படி அவளுக்காக ஏழு வருஷம் லாபானிடம் வேலை செய்தான். ஏழு வருடம்

செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

"நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுவிக்கிறார். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" என எழுதினான்.

கோபத்தையும் விரோதத்தையும் கொண்டு தங்கள் இருதயத்தில் அன்பு வேர்விட்டு வளர சிறிய இடத்தையே கொடுக்கின்றார்கள். 1கொரி.13-ல் அன்பைப் பற்றிய பொக்கிஷங்கள் சில வசனங்களில் குறிப்பிடப்பட்டு, நம்முடைய வாழ்வில் அதனுடைய பலன்கள் பற்றியும் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. பின்வரும் இந்தக் கூற்றுகளை கவனத்துடனும் ஜெபத்துடனும் வாசியுங்கள்: "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப்புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது---"

தேவனால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாயிருப்போமானால் ஒரு கசப்பான, ஆத்திரமூட்டக்கூடிய மன்னிக்காத மனநிலையை, ஒரு அன்பின் மனநிலையினால் அகற்றப்பட வேண்டும். விரோதத்தை மனதில் அடக்கிவைக்கிறவர்கள் தவறான எண்ணங்கொண்டு தாங்கள் மன்னிக்கமறுப்பதில் நியாயமிருக்கிறது என நினைக்கலாம். அவர்கள் தங்களை மனவேதனைப்படுத்தியவர்களின் குற்றங்கள் நீக்கப்படும்படிக்கு மிகப்பெரிதாகயிருக்கையில் தங்களுடைய பாவம் சிறியதாயிருக்கிறது எனக் கருதலாம். ஆனால் தேவனுடைய அளவை வித்தியாசமாயிருக்கிறது. யாரோ ஒருவர் மற்றவருக்கு விரோதமாக தவறிழைத்துவிட்டால், அவன் மனந்திரும்பி மன்னிப்புக் கோருகிறார், அவனுடைய இருதயம் தாழ்மையுள்ளதாயும் தேவனுக்கு முன்பாக மனஸ்தாபப் படுகிறதாயுமிருக்கிறது. அவன் மன்னிக்கப்படுவான்.

எப்படியாயினும், ஒரு நபர் மற்றவரை மன்னிக்கமறுக்கும்போது, அவனுடைய மனநிலை தேவனுடைய பார்வையில் அவனுடைய பாவத்தை பெரிதாக்கும். 1யோவா.4:20,21 கூறுகிறது, "தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்".

நீங்கள் விரோதத்தினை அடக்கிவைக்கும் குற்றஉணர்வைக் கொண்டிருந்து உங்களுடைய மன்னிப்பைக் கோரியிருக்கின்ற நபரை மன்னிக்க மறுத்துக்கொண்டிருப்பீர்களானால், உங்களுடைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். நீங்கள் கடைபிடிக்கும் மார்க்கம் ஒருவனுடைய சரீரம் மற்றும் ஆவிக்குரிய அழிவை ஏற்படுத்துபவையாகும். உங்கள் தேவை, நீங்களே மனந்திரும்பி மன்னிப்பு கோரவேண்டுமென்பதே!



வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப்போவதில்லை" (ஏசா.35:8) என எழுதினார்.

கேள்விப்படுதலில், புரிந்துகொள்ளுதல் மேலும் தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ளுதலில், ஒருவன் உறுதியாக நாட்டப்பட்டு சத்தியத்தில் ஊன்றக் கட்டப்பட்டவனாக மாறுகிறான். அவன் இயேசு கிறிஸ்துவாகிய கன்மலையில், உறுதியாக அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டதாயிருக்கிற கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினனாக மாறுகிறான் (மத்.16:18; 1கொரி.3:11).

மத்தேயு13-ல் விதை விதைக்கிற உவமையில், இயேசு அது மிகவும் அவசியமாயிருந்த போதிலும் விதை விழுந்து முளைத்து பலன் கொடுப்பதற்கு இது போதுமானதல்ல என்ற உண்மையினை வலியுறுத்தினார். அது அதிகமாக அறுவடை பலனைக் கொடுக்கும்படி அது நல்ல இருதயத்தில் விழுந்து, வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டியிருந்தது.

விதைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய விதை நிலைத்திருந்து விருத்தியடையும்படி பராமரிக்கப்பட வேண்டும். அப்படிச்செய்தால் மட்டுமே அறுவடை செய்ய இயலும். ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில், அவன் இரட்சிக்கப்பட்டிருப்பது மட்டுமே முக்கியமானதாக இருக்கக் கூடாது, ஆனால் அவன் இரட்சிப்பில் நிலைத்திருக்க வேண்டும். ஏனென்றால், இரட்சிப்பைக் கொண்டு வரும் அடிப்படைக் கட்டளைகளுக்கு ஒருவன் கீழ்ப்படிந்த பிறகு, அவன் கிறிஸ்துவை தொடர்ந்து பின்பற்றவும், அவருடைய போதனைக்குக் கீழ்ப்படியவும், மரணபரியந்தம் அவருக்கு உண்மையாயிருக்கவும் வேண்டும் (வெளி.2:10).

கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். பவுல் கொலோசெய சபை சகோதரருக்கு இந்த வார்த்தைகளை எழுதினார்: " நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலோ.1:23,24).

ஆனால் விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்படுதல் என்பதின் பொருள் என்ன? இதன்பொருள், முதலாவது ஒருவன் பிரதான மூலைக்கல்லாகிய இயேசுகிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டவனாயிருக்க வேண்டும். மேலும் அவன் சத்தியத்திற்கு (ஆதாரமும்) ஸ்திரமும் தூணுமாகிய சபையின் அங்கத்தினனாக மாறினவனாயிருக்கிறான் எனப் பொருள்படுகிறது (1தீமோ.3:15).

ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறவன்: இப்போதிருந்து தான் தொடந்து வளரும்படிக்கு தேவனுடைய வார்த்தையைத் தொடந்து வாசிக்க வேண்டியவனாயிருக்கிறான் என்று பொருள். தன்னுடைய ஆத்துமா தேவனுடைய சித்தத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது எனவும், அவன் கர்த்தரிடத்தில் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான் எனவும் பொருள்படுகிறது. அவன் தான் யார் என்பதையும், தான் எப்படியிருக்கிறான் என்பதையும், என்ன போதிக்கவேண்டும் என்பதையும், அவன் எப்படி வாழவேண்டும் என்பதையும் அவன் எங்கே போகின்றான் என்பதையும் அவன் அறிகிறான். அவைகளில்

சந்தேகமில்லை, சந்தேகத்திற்கு இடமுமில்லை. அவன் குற்றமற்றவன் அல்ல, ஆனால் அவன் குற்றமற்ற ஒருவரை பின்பற்றுகிறான். கிறிஸ்துவுக்குள் அவன் பரலோகத்திற்கு கொண்டுசெல்லுகிற குறுகலான வழியில் செல்கிறான்.

ஒருவன் விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்பட்டிருக்காவிட்டால், அவன் தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே இங்கும் மங்கும் அலைகளைப்போல அடிப்பட்டு அலைகிறவனாயிருப்பான் (எபே.4:14), மேலும் சோதனை வரும் நேரத்தில் விசுவாசமற்றவனாக மாறிவிடுவான். அப்படிப்பட்ட மனிதன் தொடர்ந்து நிலைத்திருக்கக் கூடாமல், அவனால் கர்த்தருடைய சபை தூஷிக்கப்படும். மாறாக, சத்தியத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டுள்ள ஒருவன் நிலைத்திருக்கிறான், உண்மையுள்ளவனா யிருக்கிறான், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆயத்தமுள்ளவனாயிருக்கிறான். இவன் இரட்சிக்கப்பட்டிருப்பது மட்டும் அல்ல, இரட்சிப்பில் நிலைத்திருந்து, சத்தியத்திற்காக நின்று நல்மாதிரியை உருவாக்கி, நற்கனி கொடுத்து, முடிவிலே பரலோகத்திற்குச் செல்ல விரும்புகிறான்.

விசுவாசத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள். அவர்கள் உலகத்தை மாற்றுவார்கள். நீங்கள் விசுவாசத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டிருக்கிறீர்களா?

**தெரிந்துகொள்வோம்!** **லீபனோன்** KRK. Ravi Asir

டாரஸ் மலைப்பகுதி என்னும் ஆசியா மைனரில் அமைந்துள்ள மலைப்பகுதியின் தொடர்ச்சியாக லீபனோன் பர்வதங்கள் அமைந்திருக்கின்றன உண்மையிலேயே இவைகள் இரண்டும் இணையான பகுதிகளாக அமைந்திருக்கின்றன. லீபனோன் பர்வதங்கள் மேற்கு பகுதியிலும், லீபனோனுக்கு எதிராக மற்றொருவரிசை பர்வதங்கள் கிழக்கு பகுதியிலும் அமைந்து இருக்கின்றன. சீரியா மற்றும் பாலஸ்தீனா தேசங்களின் வழியாக நூறு மைல் தூரம் இம்மலைப் பகுதி நீண்டு சென்ற பின்பு அவைகள் பலஸ்தீனா பகுதிகளுக்குள்ளாக கடந்து சென்று சூயஸ்வளைகுடா பகுதியில் முடிவுறுகின்றன. இந்த இரண்டு லீபனோன் மலைப்பகுதிகளுக்கும் இடையே பழங்காலங்களில் கோயல் சீரியா என்று(Coele syria) ("பள்ளமான சீரியா") அழைக்கப்பட்ட பசுமையான பள்ளத்தாக்கு உள்ளது. இப்பெயரானது அக்காலங்களில் பரவலாக தென் சீரியாவுக்கும், பாலஸ்தீனாவுக்கும் (பொனீஷியா நீங்கலாக) பொருத்தமானதாக இருந்தது. யோசுவா 11:16-ல் சொல்லப்பட்டிருக்கும் இப்பள்ளத்தாக்கு சரியாக இன்று பிகாத் - ஹா - லீபனோன் (Biq`ath - ha - Lebanon) (லீபனோன் பள்ளத்தாக்கு) என்று அழைக்கப்படுகிறது. இது சில சமயங்களில் பீக்கா ஆ (the Beqa`a) என்று "பள்ளத்தாக்கு" குறிப்பிடப்படுகிறது.

**அப்படியா!**

**1. இறக்கையில்லாத பறவையினம்? — கிவி**

**2. நாக்கை அசைக்கமுடியாத ஒரே விலங்கு? — முதலை**

**3. விலங்குகளின் அரசனான சிங்கத்தின் ஆயுள்? — 15 ஆண்டுகள்**

**4. கங்காரு ஒரே பாய்ச்சலில் எவ்வளவு தூரம் தாண்டும்? — சுமார் 9 மீட்டர்**

**5. உலகிலேயே கொசுக்கள் இல்லாத நாடு? — பிரான்ஸ்**



உங்களுக்கும் மன்னிப்பார்......" (மத்.6:14,15) எனச்சொன்னார். ஆனால் அவன் நண்பன் எண்1 என்னுடைய வெட்கங்கெட்ட, வேண்டுமென்றே செய்த குற்றத்திற்கு எதிரான தன்னுடைய சிறிய மற்றும் நியாயமான முன் கோபத்தினை நிறுத்துப்பார்த்து, அப்புறம் அவன் தன்னுடைய சூழ்நிலைக்கு இந்த எச்சரிப்பினை செயல்படுத்த இயலாது என தீர்மானிக்கிறான். எனவே அவன் தன்னுடைய எரிச்சலை விடாதிருக்கிறான். மன்னிக்காத ஜனங்களுக்கு உணர்வுபூர்வமாக என்ன நடக்கிறது? அவர்கள் முன்கோபக்காரர்களாக மாறுகின்றனர், ஒத்துப்போக கஷ்டப்பட்டுக்கொண்டு அவர்கள் சந்தோஷமற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். தங்களுடைய சந்தோஷமின்மையால், அவர்கள் தங்களோடு அனுதினமும் நெருக்கமாக தொடர்புகொள்ளுபவர்களை விசனப்படுத்துகின்றதும், எதிப்பாராத மற்றும் கோபங்கொள்ளாதவர்கள்மேல் கோபத்தைக் காட்டுகிறார்கள்.

☐ மன்னிக்காத ஜனங்களுக்கு சரீரப்பிரகாரமாக என்ன நடக்கிறது? அவர்கள் விபரீதமான உடல்நல பிரச்சனைகளாகிய அதிக மனஸ்தாபம், கோபம், மாரடைப்பு, பெருங்குடல் புண், மூட்டுவலி மேலும் சரீர அழுத்தத்தால் ஏற்படும் விபரீதமான நிலைகள் மற்றும் கோபத்தின் மூலம் சரீரத்தில் விரோதம் வெளிப்படுதல் போன்றவற்றினால் அவதிப்படுகின்றனர்.

☐ மன்னிக்காத ஜனங்களுக்கு சமூக சம்பந்தமாக என்ன நடக்கிறது? மன்னிக்காத நபருக்கு நீண்டநாள் நட்பினை கொண்டிருப்பது கூடாத காரியமாயிருக்கும், மேலும் மன்னிக்கமுடியாத மனநிலையுடனிருப்பதால் குடும்ப அங்கத்தினர்களோடு கூட உறவுகொண்டிருப்பது கடினமாகயிருக்கும்.

☐ மன்னிக்காத ஜனங்களுக்கு ஆவிக்குரிய பிரகாரமாக என்ன நடக்கிறது? இயேசு, "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்.6:15) என எச்சரிக்கிறார். இவைகள் வீணான வார்த்தைகளல்ல, ஒரு நாளில் நம்முடைய நியாயாதிபதியாக இருக்கப்போகிற நம்முடைய கர்த்தர் உருவாக்கின வாக்கு உறுதியாகும். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக்குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு; பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப்பண்ணினார். மேலும் "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என எச்சரிக்கப்படுகிறோம் (யோவா.12:48).

சங்கீதக்காரன் 34:11-18 வசனங்களில், "பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

"நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்? உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; சமாதானத்தைத்தேடி, அதைத் தொடர்ந்துகொள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. தீமை

பெண்கள் பகுதி

# நான் மன்னிக்க மாட்டேன்
# I Won`t Forgive

-Betty



உலகில் சந்தோஷத்துடனிருப்பதைவிட கோபத்துடனிருப்பதையே நல்லதென்று தெரிந்தெடுக்கிற ஜனங்கள் காணப்படுகின்றனர், ஜனங்கள் மன்னிப்பதை விட பொறாமையையே சுமந்து கொண்டிருக்கிறவர்களாக காணப்படுகின்றனர். எப்படியோ தங்களை வேதனைப் படுத்தியவர்களை அல்லது தங்கள்மேல் கோபங்கொண்டவர்களை தங்களுடைய பழிவாங்கும் செயலால் வஞ்சம் தீர்த்துக்கொள்ளுகின்றனர், மன்னிப்பதற்கு மறுக்கின்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இப்போது இரு நபர்களை பார்ப்போம்: முதலாவது, நண்பர் எண்1 அறிந்தோ அல்லது அறியாமலோ நண்பர் எண்2 வுக்கு ஏதோ தீங்கிழைத்து விட்டான். பாராமுகமாக, அவன் தவறுக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளான், எனவே அவன் மன்னிப்பு கேட்கிறான். ஆனால் நண்பர் எண்2 கோபத்தினை வெடிக்கச் செய்து மன்னிக்க மறுக்கின்றான்.

இப்போது என்ன சம்பவிக்கிறது? நண்பர் எண்1 ஐக்கியத்தினை தக்கவைத்துக் கொள்ள விருப்பமுடையவனாயிருக்கிறான், அவன் இயல்பான முறையில் நடந்துகொள்ள முயற்சிக்கிறான், பேசுகின்றான், சிரித்துக்கொள்ளுகின்றான், ஆனால் பலனில்லை. காலம் கடந்த செல்லுகையில், அவன் தன் வாழ்க்கையில் மற்றவர்களோடு உறவினை அமைத்துக்கொள்ளுகின்றான், கொஞ்சங் கொஞ்சமாக நண்பர் எண்2 ஐ மறக்கின்றான். அவன் அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, அவனுடைய கண்களில் எரிக்கின்ற தனல்போன்ற கோபத்தைக் கண்டு கசப்பான உணர்வுகள் இன்றும் உண்டென ஞாபகப்படுத்தப்பட்டு காரியங்கள் சரியாக வில்லையென அவன் வருத்தப்படுகிறான். ஆனால் பல முறை கடந்த பிரச்சனைகள் மேலும் நண்பன் எண்2 மறக்கப்படுகின்றான். பிறகு நண்பன் எண்2 ன் நிலை என்ன? அவன் தன்னுடைய கோபத்தை, தன் கசப்பினை, தான் இந்நிலைக்குள்ளாகும்வரை தன் நண்பன் மேல் தீர்க்கக்கஷ்டமான பிரச்சனையை வளர்த்திருக்கிறான். அவன் கோபத்துடனே தன் படுக்கைக்குச் செல்கிறான் கோபத்துடனே தன் படுக்கையைவிட்டு எழுகிறான். எப்பொழுதெல்லாம் அவன் நண்பன் எண்1 ஐ நினைக்கிறானோ? அப்பொழுதெல்லாம் அவனுக்குள்ளாக ஆத்திரமூட்டும் அலை மென்மேலும் எழுவதை அவன் உணர்கிறான். தன் நண்பன் மேலுள்ள தன்னுடைய சகிக்கமாட்டாத இயல்பு அவனுடைய பெருமைக்குரிய தனித்தன்மையோடே ஊடுருவுகிறது, அதனால் அவன் மிகக் கோபக்காரனாக மாறி, 'தன்னைக் கோபமூட்டுகிற' எவரையும் சகிக்கமாட்டாதவனாக மாறிவிடுகிறான். அவனுடைய வாழ்க்கை சிறிய மற்றும் பெரிய மோதல்களினாலும் எரிச்சல்கள் மற்றும் வெறுப்புகளினாலும் ஏற்படும் பிரிவினால் வளருகிறது.

அவன் மன்னிப்பைக் குறித்ததான ஒரு உபதேசத்தைக் கேட்கிறான். இயேசு, "..... மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா



# விலையேறப்பெற்ற பொக்கிஷம்
# The Precious Treasure

-M.Rajamani




அன்பானவர்களே! இந்த உலகத்தில் மிகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷம் பாதுகாக்கப்படவேண்டியது எதுவென்றால் மனிதனின் ஆத்துமாவாகும். பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என எசேக்.18:4-ல் காண்கிறோம். இந்த ஆத்துமாவை திருடன் (பிசாசு) திருட விரும்புகிறான். பாவம் செய்யத்தூண்டுகிறான். இதை நாம் இழந்துவிட்டால் மனிதன் நிம்மதியை இழந்து கவலையடைகிறான். அவன் பின்பு பரலோகவாழ்வையும் இழக்க நேரிடும். அன்பான சகோதரர்களே, சகோதரிகளே நமது பூலோக வாழ்வையும் பரலோக வாழ்வையும் இழந்துவிடாமல் திருடனிடமிருந்து அதாவது பிசாசினிடமிருந்து நம்மை ஜாக்கிரதையாய் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். உலக வாழ்க்கைக்கு தேவையான பணத்தையும், உடமைகளையும் நம்மால் பாதுகாத்துகொள்ளலாம். ஆனால் என்றும் அழிவில்லாத மனித ஆத்துமாவை விலையேறப்பெற்ற இந்த பொக்கிஷத்தை கவனமாக பாதுகாத்துக்கொள்ளவேண்டியது நமது கடமை. "மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை கெடுத்து நஷ்டப்படுத்திக்கொண்டால் அவனுக்கு லாபம் என்ன? (மாற்.8:36).

இன்றைக்கு இந்த ஆத்துமாவை திருடும்படியாக பல்வேறு வகையான பாவங்களை பிசாசானவன் தூண்டிவிடுகிறான். சினிமா, தொலைக்காட்சியில் வரும் பல ஆபாசகாட்சிகள், மதுபானம், விபச்சாரம் இவைகளினால் மனித ஆத்துமாவை பிசாசானவன் திருடிவிடுகிறான். இதிலிருந்து நம்மை ஜாக்கிரதையாக பாதுகாத்துக்கொள்ளவேண்டும். இந்த பூமியிலே மனித ஆத்துமாவை திருடி பாதாளத்தில் பங்கடைய செய்ய பிசாசு முயற்சிக்கிறான். ஆனால் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொல்கிறார்; "திருடன் திருடவும் கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்; நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார்" (யோவா.10:10). இயேசு ஒருவரே மனிதனுக்கு ஜீவனையும், பாதாளத்திற்குவிலக்கி நமக்கு பரலோக வாழ்வையும் கொடுக்கமுடியும். அவர் நமது ஆத்துமாவை காக்கவல்லவராயிருக்கிறார். எனக்கு விரோதமாக பாவஞ்செய்கிறவனோ தன் ஆத்துமாவை சேதப்படுத்துகிறான். என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் (நீதி.8:36). மேலும், "தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் என்றார்" (நீதி.28:13).

அருமையான சகோதர, சகோதரிகளே, நம்மையும் இயேசுவின் கரத்தில் ஒப்படைப்போம். அவரே நம்மை திருடன் கையிலிருந்து (பிசாசின் கையிலிருந்து) நம்முடைய ஆத்துமாவைக் காத்து நித்தியமான பரலோக வாழ்வைத்தரக்கூடியவர். அவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்**
**மத்தேயு 6:21**

# கிறிஸ்துவின் வசனம்



கிறிஸ்துவின் வசனம் நிலையானது
கிருபை வரமோ அழியாதது
இயேசு எந்தன் நேசரை
இங்கு கண்டேன் வேத நூலிலே

இருதிறத்தாரை ஒன்றாக்க...
இந்த பூமிக்கு வந்தவரே
அவர் விதைத்த விதைகளெல்லாம்
அறுபது நூறு பலன் தந்தது

உலகத்திலே அதிகமா அச்சடிப்பது
உயர்வான பரிசுத்த வேதமே!
அற்புதத்தை செய்பவரே
அடையாளம் சொல்பவரே

உவமைகளாய் விளக்கினாரே
உண்மையாக பேசினாரே...
அனாதி தேவன் தீர்மானமே
அன்பின் சொருபி பிறப்புதான்

தேவ சித்தத்தில் பிறந்தாரே
தேடி சென்று நன்மை செய்தாரே
பாவ மனிதரே கேளுங்கள்
பரமசுதனை ஏற்றுக்கொள்ளுங்கள்

அவர் நுகம் இலகுவானது
அன்பின் முகம் தெரிகின்றது
பாரசுமையை இறக்கிடுவோம்
பரிசுத்தரை துதித்திடுவோம்

*- Gem Robert*



## தேவனுடைய கிருபை — Grace of God

அவர் எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கிறார்
ஒவ்வொரு புதிய நாளையும் சந்திக்க,
அவர் என்னை இருளினூடே வழிநடத்துகிறார்
கண்டு வழி காட்ட
அவர் என்னை தேற்றித் தாங்குகிறார்
என்னுடைய துயர நேரங்களில்,
அவர் எனக்கு ஆத்தும உணர்வை அருளுகிறார்
உண்மையான சந்தோஷத்தைக் காண
அவர் எனக்கு மன்னிப்பருளுகிறார்
நான் வழிதவறிச் செல்லுகையில்
அவர் என் துன்பங்களிலும் என் பயங்கள் விறுவிறுப்பைக்
குறைக்கையிலும் உதவி செய்கிறார்
அவர் ஒருபோதும் என்னைக் கைவிடுகிறதில்லை
நம்பிக்கையற்ற நொடி நேரங்களில்,
ஒரு உதவிக்கரத்தை நான் நாடும்போதெல்லாம்
நான் எப்போதும் அங்கே அவரைக் கண்டுகொள்கிறேன்

**- Harold F.Mohan**

## நடப்புச்செய்திகள்

- நாடு முழுவதும் 100 ஸ்மார்ட் நகரங்கள் அமைக்கப்படும் என்று பிரதமர் நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- பிறந்த நாள், திருமண நாளில் போலீசாருக்கு விடுமுறை மகாராஷ்டிரா அரசு அறிவிப்பு.
- உள்ளாட்சி இடைத்தேர்தலில் முதல் முறையாக குற்ற வழக்குகளில் குறிப்பிட்ட காலத்துக்கு மேல் தண்டனை பெற்றவர்கள் போட்டியிட மாநில தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.
- இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டித்தொடர் அக்டோபர் 12-ம் தேதி தொடங்கி டிசம்பர் 20-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 26,27 மற்றும் 28 தேதிகளில்
சென்னையில் நடைபெற்ற
World Evangelism Bible School
-லில் கலந்துகொண்ட மாணவர்கள்
மற்றும் அவர்களை வழிநடத்தும் ஆசிரியர்கள்







கடந்த மாதம் 17-ம் தேதி
தேனி மாவட்டத்தில் நடைபெற்றுவரும்
ஊழியத்தின் மூலம் சுவிசேஷ சத்தியத்திற்கு
கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றவர்கள்
மற்றும் சகோ.ஜீவதுரை சபை ஊழியர்